Registered as a Newspaper

ரெலிபோன் வாங்க
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
R. G. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
R. G. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 12 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபான் பிறை 15 (25 04-1986) UTHAYAN ■ A LIVELY TAMIL DAILY கதிர்:135

# புதிய யோசனை: கூட்டணியினர் நாளை ஆராய்வர்

## அதற்குமுன் ராஜீவுடன் சந்திப்பு; நிராகரிக்கப்படும் என எதிர்பார்ப்பு

புதுடில்லி, ஏப். 25

இலங்கையின் புதிய யோசனைகள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நாளை (சனிக்கிழமை) ஆராயும்.

கூட்டணித் தூதுக் குழு அதற்கு முன்னர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்தித்துப் பேசும்.

இலங்கை அரசுடன், கூட்டணி நேரடி பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று ஆலோசனை விடுக்கப்படவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

கடந்த புதன்கிழமை இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன், முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோரைச் சந்தித்த பின்னரே திரு அமிர்தலிங்கம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது;

இலங்கை அரசின் யோசனைகள் தெளிவற்றவை பொதுவானவை. திரு. ஜெயவர்த்தனவின் போக்கில் எந்தவித மாற்றமும் இல்லை தமிழர் மீதான படுகொலைகள் நிறுத்தப்படும் வரை எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படமுடியாது.

இலங்கை அரசுக்கும் கூட்டணிக்கும் நேரடிப் பேச்சுக்கள் நடத்தப்பட (4 ஆம் பக்கம் பார்க்க)



கந்தளாயில் திடீர் அழிவால் பாதிக்கப்பட்டவையை பாக்கிறது போல, அரசாங்க அழிவால் பாதிக்கப்பட்டவையையும் தமிழ் பகுதிகளுக்கு வந்து அன்னை திரேசா பார்த்தா மெத்த நல்லதாய் இருக்கும்..!

## விடுவிக்க கோரி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப் 25

இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட மஸ்கெலியா நிர்வாக முகாமையாளரை விடுதலை செய்யக்கோரி, நேற்று மானிப்பாயிலிருந்து கே. கே. எஸ். வீதியூடாக யாழ்நகர் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

இவ் ஊர்வலத்தில் சுமார் 500 பேர் கலோக அட்டைகளுடன் கலந்து கொண்டனர்.

வட பகுதியில்

# முகாம்களுக்கு அருகில் உள்ள கட்டடங்கள் ஆபத்தில்

## கூட்டுத் தளபதி புதிய உத்தரவு

கொழும்பு, ஏப். 25

வடபகுதி முகாம்களுக்கு அருகில் உள்ள அரச, தனியார் கட்டடங்களுக்கு ஆபத்து. அவை போராளிகளினால் பாவிக்கப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை அழிப்பதற்காக விமானத் தாக்குதல் நடத்தப்படும்.

முகாம் பொறுப்பு அதிகாரிகளுக்கு அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான உத்தரவை கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்க நேற்றுப் பிறப்பித்தார்.

அதிகரித்து வரும் தீவிரவாதிகளின் வன்செயல்களுக்கு எதிராக எடுக்கப்படும் முதலாவது கடும் நடவடிக்கை இது என்றும் அவர் சொன்னார்.

முகாம்களுக்கு அருகில் உள்ள மக்கள் தீவிரவாதிகளிடம் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும், பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகளின் தளமாக வடபகுதி இருந்து வருகிறது

முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை திரேஸா இலங்கையில்

கொழும்பு, ஏப்ரல் 25

அன்னை திரேஸா, தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்

சென்னையில் இருந்து கொழும்பு வந்த அன்னை திரேஸா இரண்டு தினங்கள் இலங்கையில் தங்கி நிற்பார்.

அனேகமாக இன்று கந்தளாய்க்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட இருக்கிறார் என்று தெரிகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அனாதைகள் இல்லத்தை பார்வையிடவே அவர் இலங்கை வந்திருக்கிறார்.

சனிக்கிழமை அன்னை திரேஸா, புதுடில்லி செல்வார்.

## ★இந்திய மீனவருக்கு எச்சரிக்கை

சென்னை, ஏப்ரல் 24

இலங்கை கடற்பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என, இந்திய மீனவருக்கு இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன்பிடிக்க வேண்டாம் என்றும், மீறும் மீனவர் சுடப்படுவர் என்றும் இலங்கை கடற்படை எச்சரித்ததை தொடர்ந்தே இவ்வறிவுறுத்தல் விடப்பட்டது.

கச்சதீவு கடற்பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படையிடமே, இலங்கை கடற்படையால் இந்த எச்சரிக்கை விடப்பட்டது.

## அனுராதபுரம் ரயில் நிலையத்தில் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஏப். 25

அனுராதபுரம் ரயில் நிலையத்தில் வைத்து தமிழ்ச் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டார்.

இவர் மயக்கமுற்ற நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்,

கடந்த புதன்கிழமை அனுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே இந்தத் தமிழ்ச் சட்டத்தரணியும் இன்னொரு தமிழரும் தாக்குதல்களுக்காளாகினர்.

இரண்டுபேரும் மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்ச் சட்டத்தரணியின் பெயர் திரு. தா ம. கனகசிங்கம் மன்னாரில் இருந்து வந்து ரயில் நிலையத்தினுள் செல்கையில் இவர் தாக்கப்பட்டார் என்று அறியப்படுகிறது.

புகை மண்டலம் அகன்று

# அனுராதபுரம் வழமை நிலைக்குத் திரும்புகிறது

## எனினும் பதற்றம் தணியவில்லை

கொழும்பு, ஏப். 25

குண்டுவெடிப்புச் சம்பவத்தினால் அனுராதபுரத்தில் ஏற்பட்ட புகை மண்டலம் நேற்று அகன்று விட்டதாக அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் களஞ்சியத்துக்கு 35 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தஹம் விமலசேன நேற்றுத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவரின் சடலம் அடையாளங் காணப்படவில்லை.

ஏனைய சடலங்களில் 5 தமிழருடையவை என்றும் 4 சிங்களவருடையவை என்றும் கூறப்பட்டது.

களஞ்சிய உதவி முகாமையாளர் ஜி. ஜி. ஹேமானந்த, பாதுகாப்பு அதிகாரி குமாரசேகரா, ஊழியர்களான சோமபால, பெரேரா ஆகியோர் இறந்த சிங்களவர்களாவர்.

இறந்த தமிழரின் பெயர்கள் கிடைக்கவில்லை.

இதனிடையில் குருநாகலில் உள்ள களஞ்சியத்தில் இருந்தே எரிபொருள் விநியோகம் நடத்தப்படும் என்று கூட்டுத்தாபனம் அறிவித்துள் (4 ஆம் பக்கம் பார்க்க)

அனுராதபுரச் சம்பவம்:

## ஈரோஸ் உரிமை கோருகிறது

சென்னை, ஏப்ரல் 24

அனுராதபுரம் எண்ணெய்க் குத குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஈழப் புரட்சிகர அமைப்பு உரிமை கோரியுள்ளது, முன்னணிப் பேச்சாளர் வி பாலகுமார் இது சம்பந்தமான உரிமைகோரும் அறிக்கையை சென்னையில் நேற்று விடுத்தார்.

இலங்கைப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே அனுராதபுரச் சம்பவம் திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் 8 பேர் கொல்லப்பட்டனர்; களஞ்சியத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் அறிக்கையில் கூறப்பட்டது.

## முன் எச்சரிக்கை நடவடிக்கை என்று ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

அனுராதபுர பெற்றோல் களஞ்சிய தகர்ப்பு- ஓர் எச்சரிக்கை நடவடிக்கை என்ற தலைப்பில் ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) நேற்று வெளியிட்ட அறிக்கை விவரம்:

அனுராதபுரம் பெற்றோலியக் களஞ்சியத்தில் புதன் அதிகாலை விசேட இரசாயனப் பொருள்களுடன் கலந்து வைக்கப்பட்ட வெடிபொருள் பொதி புதன் பிற்பகல் வெடித்ததனால் இக்களஞ்சியம் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது. வடபகுதியிலிருந்து சென்ற பவுஸர் வெடித்ததினாலேயே இத்தகர்ப்பு நிகழ்ந்ததாகக் கூறப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும்.

இத்தகர்ப்பு நடவடிக்கையானது அரசின் இராணுவத்தீர்வை நோக்கிய அண்மைக்காலப் போக்குகளுக்கு எச்சரிக்கை செய்யும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மித்துவரும் காலப்பகுதிக்குள்:

1) திருகோணமலை, மூதூர் மாவட்டங்களில் நிலைகொண்டுள்ள தமிழ் அகதிகளை வடபகுதியை நோக்கி விரட்டியடிப்பது நிறுத்தப்படுவதுடன், தீவாவியில் சிங்களக் குடியேற்றத்தை வலுவடையச் செய்வதற்கும் மூதூரில் சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிப்பதற்குமாக இஸ்லாமிய மக்கள் மீது தொடரும் திட்டமிட்ட தாக்குதல்கள் நிறுத்தப்பட (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25-4-1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:

6.00 முதல் 7.30 வரை

ராகுகாலம்:

10.30 முதல் 12.00 வரை

இவை யாழ்ப்பாணத்துக்கும் இதற்கும் பொருந்தும்

வெள்ளவத்தை குண்டு வெடிப்பு

## அந்த இளைஞர்கள் இருவரும் எங்கே?

கொழும்பு, ஏப்ரல் 25

வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் பார்சல் குண்டு வெடித்த சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் இரண்டு இளைஞர்களைத் தேடுகின்றனர்

இவர்களைப் பிடிப்பதற்காக கொழும்புப் பிரதேசத்தில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளன.

தனியார் பஸ்ஸில் குண்டு வைக்கப்பட்டிருந்த பார்சலை வைத்தவர்கள் இந்த இரண்டு இளைஞர்களும் தான் என்று கூறப்படுகின்றது.

அந்தத் தனியார் பஸ்ஸில் இந்த இரண்டு இளைஞர்களும் புறக்கோட்டையில் வைத்து ஏறினார்கள்.

வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தை அணுகும் சமயம் இரண்டு இளைஞர்களும் "பார்சல் ஒன்று இருக்கிறது யாருடையது" - என்று கண்டக்டரிடம் சிங்களத்தில் வினவினார்கள்.

கண்டக்டரும் பயணிகளிடம் கேட்டார். ஒருவரும் பார்சலுக்கு உரிமை கோரவில்லை

"பஸ்ஸை பொலீஸ் நிலையத்துக்கு விடுங்கள்; அங்கு பார்சலை ஒப்படைப்போம்" - என்று அந்த இளைஞர்கள் இருவரும் சாரதிக்கு கூறினார்கள்.

அதன்படி சாரதி பஸ்ஸை, பொலீஸ் நிலைய வளவுக்குள் விட்டார்.

அதன் பின்னர் அந்த இரண்டு இளைஞர்களும் மறைந்து விட்டார்கள்.

அந்த இரண்டு இளைஞர்களும்தான் பார்சல் குண்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

## கிரேக்க கப்பலில் வாக்கி டோக்கி உட்பட பல பொருள்கள் கொள்ளை

- திருமலை மாவட்டச் செய்தியாளர் -

திருகோணமலை, ஏப் 25

திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கிரேக்க கப்பலொன்றினுள் ஆயுதந் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் புகுந்து கொள்ளை இட்டனர்.

இது சம்பந்தமாக கப்பல் மாலுமிகள் திருகோணமலைத் துறைமுகப் பொலீஸில் முறையிட்டனர்.

புதன் இரவு 9 மணியளவில் மோட்டார் வள்ளம் ஒன்றில் வந்தவர்களே 'மார்க்கோலா' என்ற பெயருள்ள கிரேக்கக் கப்பலுக்குள் ஏறினராம்.

ஆயுதங்களைக் காட்டி மாலுமிகளைப் பயமுறுத்தி விட்டு டாலர் நோட்டுக்கள், வாக்கிடோக்கி சாதனங்கள் மற்றும் விலை மதிப்புள்ள பல பொருள்களை அவர்கள் கொள்ளை இட்டுச் சென்றனர்.

மாலுமிகள் அனைவரும் கிரேக்க நாட்டவர்கள்

இதுசம்பந்தமாக மாலுமிகள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலீஸ் விசாரணை நடைபெறுகிறது.

சப்இன்ஸ்பெக்டர் நிலவீர தலைமையிலான பொலீஸ் கோஷ்டியே விசாரணை செய்கிறது.

தீவிரவாதிகளே இக்கொள்ளையை நடத்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின

பொலீஸ் விசாரணைகள் முடிவடையவில்லை.

7 கப்பல்கள் திருமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன. அவற்றில் ஒரு கப்பலில்தான் கொள்ளை நடந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருகோணமலை கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

# மண்டூர் முருகன், அம்மன் கோயில்களுக்குள் சிப்பாய்கள்?

## மூலஸ்தான கதவு திறக்கப்பட்டதாகவும் பூசகர் தாக்கப்பட்டதாகவும் புகார்

கல்முனை, ஏப்ரல் 25

புதன்கிழமை நடந்த தேடுதலின்போது மண்டூர் முருகன் கோயிலும் அம்மன் கோயிலும் மாசு படுத்தப்பட்டனவா?

முருகன் கோயிலில் மூலஸ்தானம் பல ஆண்டுகளாகத் திறக்கப்படாமலே பூசை நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த ஆலயத்தின் மூலஸ்தானக் கதவு திறக்கப்பட்டு உள்ளே சிப்பாய்கள் புகுந்ததாகவும், ஆலயத்தின் பூசகர் வெளியில் கொண்டு வரப்பட்டு தாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

திறக்கப்பட்டுள்ள மூலஸ்தானத்துக்குள் சென்று பார்க்க பக்தர்கள் அஞ்சுகின்றனர். உள்ளே தங்கவேல் ஒன்று உள்ளது என்றும் அதற்கு என்ன நடந்தது என்று சொல்ல முடியாதுள்ளது என்று ஊர் மக்கள் தெரிவித்தனர்.

அம்மன் கோயிலுக்குள்ளும் படையினர் சப்பாத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முகமூடி தலையாட்டி அம்பாறையில் 58 தமிழர் கைது

கல்முனை, ஏப்ரல் 25

கடந்த புதன்கிழமை அதிகாலை அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமங்களில் நடந்த தேடுதலின்போது 58 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

2 இளைஞர்கள் சைனயிட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்.

சுமார் ஆயிரம் சிப்பாய்கள் வரையில் இத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

மண்டூர், தம்பலவத்தை, பாலமுனை, வெத்தகாடு, குட்டிபடித்துறை, பண்டாரச்சேனை ஆகிய கிராமங்களே ஆயுதப்படையினரால் சல்லடைத் தேடுதலுக்கு இலக்காகின.

சுமார் ஆயிரம் பேர்வரையில் விசாரணைக்காக அழைக்கப்பட்டனர். 'முகமூடி' தலையாட்டியதைத் தொடர்ந்து 58 பேரை படையினர் கைது செய்தனர்.

மேல் விசாரணைக்காக கைது செய்யப்பட்டவர்கள் அம்பாறை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிர்வாகம் ஸ்தம்பிக்கும் நிலை

## படைமுகாமினால் உத்தியோகத்தர் அச்சம்

### சில நோயாளிகளும் தொல்லை

கிளிநொச்சி, ஏப்ரல் 25

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் வழியீர்கள் கடமைக்கு செல்ல தயக்கம் காட்டுகின்றனர்.

இந்த வைத்திய சாலைக்கு அருகே இராணுவ முகாம், அமைக்கப்பட்டு இராணுவக் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம்.

சில உத்தியோகத்தர்கள் இங்கு வேலைக்கு வராதுள்ளனர் மற்றும் சிலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர்.

ஒரு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களே தற்போது இங்கு கடமையாற்றி வருகின்றனர்.

இதேசமயம்தானொன்றுக்குசுமார்175பேர்தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களையும், சுமார் 500 வெளிநோயாளர்களையும், சராசரி ஒரு சடலப் பரிசோதனையும் இங்கு கவனிக்க வேண்டியுள்ளது.

அத்தோடு அடிக்கடி ஏற்படும் அசம்பாவிதங்களினால் பல சடலப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டியுள்ளது காயமடைந்தவர்களுக்கும் அவசர சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது.

இங்குள்ள குறிப்பிட்ட டாக்டர்களும், தாதி உத்தியோகத்தர்களுக்கும் மருந்தாளர்களுமே இவற்றை எல்லாம் கவனிக்க வேண்டியுள்ளது. தங்கள் கடமைக்கு மிஞ்சிய நிலையில் பலத்த சிரமத்தின் மத்தியில் இவர்கள் இவற்றைச் செய்து முடிக்க வேண்டியுள்ளது.

இவ்வைத்தியசாலை டாக்டர்கள், தாதி உத்தியோகத்தர்கள் மருந்தாளர்கள் ஆகியோருக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் இவ்வைத்தியசாலைக்கு போதிய மருந்து வசதியோ அம்புலன்ஸ் வசதியோ கிடையாது.

இந்நிலையிலும்பொறுப்பற்ற நிலையில் நோயாளர்கள் நடந்து கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது. இதனும் இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களும், சிற்றூழியர்களும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

தாங்கள் சட்டப்படி வேலை செய்யப்போவதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு இவர்கள் எடுத்துரைத்தனர் என்று தெரிகிறது.

இதனைக் கேட்டறிந்த பிராந்தியப் பணிப்பாளர் இது தொடர்பாக தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

## மே 15 ஆம் திகதி எதிர்ப்புத் தினம்

நல்லூர், ஏப்.25

மே மாதம் 15 ஆம் திகதியை எதிர்ப்புத் தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ்ப்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக் குழு கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக இக்குழு துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

1: ஸ்ரீலங்கா அரசினால் தமிழ்ப் பேசும் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகளை எதிர்த்து தமிழ் பேசும் மக்களாகிய நாம் எமது பூரண எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

2. அன்றைய தினம் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எமது பணிகள் அனைத்தையும் நிறுத்தி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எமது இருப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள வணக்கத்தலங்கள் மற்றும் பொது இடங்களில் அணிதிரள்வோம்.

## நீத்தார் புகழாரம்

### இயற்றமிழ் புலவர் சங்கர வைத்தியலிங்கனார்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அடி தொடர்ந்து,வலவைபின் கண் இயற்றமிழ் புலவர், யாப்பிலக்கண வித்தகர் எனப் பல அறிஞர்களாலும் போற்றி மதிக்கப்பட்ட சங்கர—வைத்தியலிங்கனார் அவர்கள் தமது 80வது வயதில் சிவபதம் அடைந்தார். இது இயற்றமிழ் உலகுக்கு இன்னுமொரு பேரிழப்பு என்பது மிகையாகாது.

''தோன்றிற் புகழோடு தோன்றுக'' எனும் பொய்யா மொழிப் புலவரின் கூற்றுக்கமைய வலவையிலே தமிழ் வளர்த்த பண்டிதர் பரம்பரையில் உதித்தவர் அமரர்சங்கர-வைத்தியலிங்கனார்.

இவரது பேரனாரகிய வைத்தியலிங்கனார் இயற்றமிழ் போதகாசிரியர், யாப்பிலக்கண வித்தகர் என்ற பட்டத்தையும் பாராட்டையும் இவை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தலைமையில் பல தமிழ்நாட்டு பேரறிஞர்களால் பெற்றவர்.

கடின நடையில் அமைந்த காரணத்தால் எவராலும் உரையெழுத இயலாதிருந்த கந்தபுராணம்—அண்டகோசப்படலத்திற்கு உரையெழுதிடும் மொழிப் புலமையைக் கொண்டிருந்தவர் சங்கர வைத்தியலிங்கனாரின் பேரன் அமரர் வைத்தியலிங்கனார்.

தர்க்க சாஸ்திரத்தை ஐயம் திரிபறக் கற்ற வைத்தியலிங்கனாரை, தன் சார்பில், தமிழகத்தில் மதப்பணி புரிந்த ஆங்கிலப் பாதிரியார் ''பிறிட்டோ'' வுக்கு தகுந்த பதில் கொடுக்கும்படி நாவலர் அவர்கள் எழுத்துருவில் வேண்டுகோள் விடுத்தார்.

பேரனாகிய வைத்தியலிங்கனாரின் எழுத்தில் சொல்லறிவிய உண்மைகள் புலப்பட்டதைக் கண்ட பிறிட்டோ அவர்கள் ''யாழ்ப்பாணத்துப் பனங்காட்டில் நரிகளை எதிர்பார்த்தேன் இப்படி ஒரு சிங்கம் இருப்பதை நான் அறிந்துகொள்ளவில்லை'' என வைத்தியலிங்கனாருக்கு எழுதி, தான் தொடங்கிய தர்க்க வாதத்தை தானே முடித்து வைக்கும் அளவுக்குக் கல்வியையும், மொழிப் புலமையையும் பெற்றிருந்தார்.

அத்தகையவரின் வழி வந்தபேரனாராகியபண்டிதர் சங்கர-வைத்தியலிங்கனாரும், ''கப்பல் விட்டு கட்டுத் தறியாக மாறிய திசை வியப்பென்ன!

பல பணுவல்களை ஆக்கி எமக்களித்த பண்டிதர் அவர்கள், அரசாங்க சேவையில் இருந்தகாலங்களிலும், தமது பேரனின் அடிச் சுவட்டைத் தொடர்ந்து,சைவக்கல்வியைப் போதித்தும் ஆலயங்கள் தோறும் சென்று சைவ ஆசாரம், அறிவு வளரப் பல புராணங்களுக்கு விரிவுரைகள்செய்தும் புராணப் படனங்களுக்குப் பயன் சொல்லியும், உபந்நியாசங்கள் செய்தும், திருவாசகம், திருமுறைகள் பண்ணோடு ஓதியும் பணி செய்தார்.

யாவருடனும் பண்பான முறையில் எளிமையாகப்பழகி, அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராயிருந்த பெரியாரின் இழப்பு வல்வை மக்களின் பேரிழப்பாகும்.

பண்டிதர் ஐயாவின் இறுதி ஆக்கம் 'வல்வெட்டி வேவில் பிள்ளையார் திரு ஊஞ்சல் பாடலாகும்.

அமரர் பண்டிதர் ஐயாவின் தகனக் கிரியையில் கலந்து கொண்ட பலர் பண்டிதர் அவர்களின் மொழிப்பற்றை, அறிவாற்றல் பண்புபற்றி புகழ்பாடி அஞ்சலி செலுத்தினர்.

## சோதனை தொல்லை குறைகிறது

மட்டக்களப்பு, ஏப். 25

மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் தற்போது 5 இடங்களில் மட்டுமே ஆயுதப் படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது முன்னர் 8 இடங்களாக இருந்தது.

இச்சோதனை குறையக் காரணம் அநுராதபுரம் வழியாக நடைபெற்று வந்த போக்குவரத்து தற்போது மிகுந்தலை வழியாக நடைபெறுவது தான்.

இந்நிலையில் சாலியாபுர, திருமலைச்சந்தி, கண்டிச்சந்தி சோதனைகளை எதிர்நோக்க வேண்டியதில்லை.

தற்போது ஆனையிறவு, வவுனியாச்சந்தி, மைத்திரிபுர, மன்னம்பிட்டிப் பாலம், புனானை ஆகிய ஐந்து இடங்களில்தான் சோதனை நடைபெறுகிறது.

## பரீட்சை இல்லாமல் நிரந்தரப் பதிவு வழங்குக

### ஹோமியோபதி வைத்தியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

பத்து வருடங்களுக்கு மேலாக ஹோமியோபதி வைத்திய முறையில் தொழில் புரிந்த அனைத்து வைத்தியர்களையும் அவர்கள் அதனை அத்தாட்சிப்படுத்தும் பட்சத்தில் அவர்களை எழுத்து மூலமான பரீட்சையில் தோற்றும்படி நிர்ப்பந்திக்காமல் அவர்களுக்கு நிரந்தரபதிவு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கை, ஹோமியோபதி சபையைக் கேட்டுக்கொள்வது என்று வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 27ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன் ஹோமியோபதி வைத்திய முறையை உலகுக்கு தந்த பெரியார் டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 231 ஆவது பிறந்தநாள் ஞாபகார்த்த விழா வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தினரால் கொண்டாடப்பட்டது.

## அதிபர் ஆசிரியர் மாநாடு

மானிப்பாய், ஏப்.25

இராமநாதன் கல்லூரியில் மானிப்பாய் வட்டாரக் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் கூட்டமொன்று இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறும்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கூட்டத்தில் சிறப்புரையாற்றுவார்.

## மாணவனுக்கு உடல், உள, மனப்பாங்கு வளர்ச்சி மிக முக்கியம்

### விளையாட்டுப் போட்டியில் உரை

பருத்தித்துறை, ஏப். 25

ஒரு மாணவனின் உடல், உள மனப்பாங்கு விருத்தியிலேயே அவனின் கல்வி வளர்ச்சியும் தங்கியுள்ளது

இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்வித் திணைக்கள உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திரு.வி. தங்கராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிக்கு வித்தியாலய அதிபர் திரு. பி. பூபாலசிங்கம் தலைமை வகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் விளையாட்டுத் துறையில் திறமை காட்டுபவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு வகையான உதவிகளையும் கௌரவங்களையும் வழங்கி வருகிறது.

ஒவ்வொரு மாணவனையும் கூடப்பயிற்சி விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்தி அவர்களை விளையாட்டு வீரர்களாக்குவதற்கும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் வழிவகுத்துக் கொடுக்க வேண்டியது அவசியம் என்றார்.

அடுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ. வி. தங்கராஜா உரையாற்றுகையில் விளையாட்டுத்துறையில் திறமைமிக்கவர்களுக்கு சர்வதேச ரீதியிலேயே புகழ் பெறுவார்கள். எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்கு விளையாட்டுத் துறை மிகமுக்கியமாகின்றது என்றார்.



மக்கள் முகம்

## மயிலிட்டி நலன்புரி சங்கம்

காங்கேசன்துறை,ஏப் 25

மயிலிட்டிப் பகுதி மக்களின் நலன் பேணும் நோக்குடன் மயிலிட்டி நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

மயிலிட்டி கிராமோதய சபை முன்னாள் தலைவர் திரு. ஞா. பேரின்பம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: அருள் திரு. இ. தேவராசன், ஆ. தேவதாசன், த. சண்முகநாதன், ச. இரத்தினசாமி தலைவர்: இ. வேலும்மயிலும் உப தலைவர்: பொ. அருணானந்தம், செயலாளர்: மு. சிவபாதம், உப— செயலாளர்: ஞா .பரமானந்தம், பொருளாளர் பா. சத்தியநாதன்.

10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சிறுவருக்கான விளையாட்டு மண்டபம்

### திறப்பு விழா இன்று

நல்லூர், ஏப்ரல் 25

யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கானவிளையாட்டு மண்டபம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படுகிறது

வடமாகாண எஸ் சி. எவ். (பிரித்தானியா) இணைப்பதிகாரியான திருமதி எஸ் கைலாசபதி இந்த மண்டபத்தை இன்று காலை 9 30 மணிக்கு திறந்து வைப்பார்.

இந்த மண்டபத்துக்கான செலவுகளை பிரிட்டிஷ் அரசின் எஸ் சி.எவ். வழங்கியுள்ளது.

மண்டபம் அமைப்பதற்கு பெரிதும் முயற்சி எடுத்த பேராசிரியர் டி. ராமதாஸ் அவர்களுக்கு வைத்தியசாலை வட்டாரம் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறது.

## வித்தியாலய அலுவலகம் தீயினால் சேதம்

பூநகரி, ஏப். 25

பூநகரி மகாவித்தியாலய அலுவலகம் தீயினால் சேதம் அடைந்தது.

பாடசாலையின் அயலிலுள்ள மக்களால் தீ அணைக்கப்பட்ட போதிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது

மாணவர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட பல பொருள்கள் முற்றாக தீயில் எரிந்து விட்டன என்று கூறப்படுகிறது.

## தாக்குதல்

பலாலி, ஏப். 25

மூன்று நாட்கள் இடைவெளிக்குப் பின்பு பலாலி விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளை யொட்டி ஹெலிக்கொப்டர் தாக்குதல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.

ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்ட சமயம் விமானம் ஒன்று வந்திறங்கி 15 நிமிடங்களில் திரும்பிச் சென்றது.

## திரையுலகின் இன்னுமொரு இரட்டையர்கள் இவர்கள்

'கலைநிதி' என்ற பத்திரிகையில் எழுதத் தொடங்கி சினிமா உலகுக்கு பிரதி(கதைகள்) எடுப்பவராக வந்து, கவிஞராகவும், உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர் கண்ணன்.

1973 இலிருந்து என். எஸ். மணியம், கிருஷ்ணன் பஞ்சு போன்றவர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றி இருப்பவர் சக்தி (சுப்பிரமணியம்)

இவர்கள் இருவரும் திரையுலகுக்கு சக்தி—கண்ணன் என்ற பெயரில் இயக்குநர்களாக அறிமுகமானது 'யார்?' என்ற படம் மூலம்.

டைரக்டர் மகேந்திரன் இயக்கிய 'கைகொடுக்கும் கை' படத்தின்போது இவர்கள் இருவரும் துடிப்புடன் பணியாற்றினார்கள்.

இதை அவதானித்த படவிநியோகஸ்தர்களான தாணு, சேரன், சூரி ஆகியோருக்கு இவர்களைப் பிடித்து விட்டது

தங்களது 'யார்' படத்திற்கு அவர்களையே டைரக்டர்களாக்குவது என்று நிர்மானித்தனர்.

முதன்முதலாக டைரக்டர்களாக அறிமுகமாகிய 'யார்' படம் நல்ல பெயரைப் பெற்றுத் தந்திருப்பதில் இருவருக்குமே சந்தோஷம். தங்கள் மீதுநம்பிக்கைவைத்து அறிமுகப்படுத்திய தயாரிப்பாளர்களை நன்றியுடன் இருவரும் நினைவு கூருகின்றனர்.

'ரசிகர்களின் ரசனையை யாரும் சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாது தமது பாணியை ரசிக்கின்றார்கள் என்றும் அதை அவர்கள் விரும்பும் பாணியிலேயே மேலும், மேலும் மெருகூட்டி அழகிய தொரு கவிதை நயத்துடன் சொல்ல விரும்புகிறேன் — இப்படி கூறுகிறார் கண்ணன்.

'எங்களின் புதிய முயற்சியை மற்றவர்கள் பாராட்டும்போது தெம்பாக இருக்கிறது திரையுலகத்தில் இருப்பவர்கள் அவர்களாகவே படத்தைப் பார்த்து பாராட்டியது மறக்க முடியாத விஷயம்.

நடிகர் ராஜேஷ் கூட எங்களது திறமையைப் பாராட்டினார் என்றார் சக்தி (சுப்பிரமணியம்)

தினசரி சினிமா

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## வானியல் அவதானிப்பு பாசறையின் நோக்கம் என்ன?

### சிதம்பராக் கல்லூரி அதிபர் விளக்கம்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 25

தற்பொழுது உலக வானியல் ஆய்வாளர்களின்பார்வையில் விமர்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஹேலியின் வால்நட்சத்திரம் பற்றிய விளக்கங்களை நமது சிறுவர்களும் முதியோரும் பெற வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வானியல் அவதானிப்புப் பாசறை ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் இவர்கள் பெரும் பயன் அடைவர் என்பதில் ஐயமில்லை.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வானியல் அவதானிப்புப் பாசறைக்குத் தலைமை வகித்துப் பேசிய சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

'கோள் மண்டலத்தின் அதிசயங்களைக் கண்டறிவதில் விஞ்ஞானிகளை விட நமது சோதிடர்கள் ஆற்றிய பங்கு மகத்தானது.

வானவெளியில் மறைந்திருக்கும் ரகசியங்கள், எமது வெறும் கண்களுக்குப் புலப்படாத அற்புதங்கள்.

இந்தவகையில் வான் வெளி ஆராய்ச்சியானது இன்று பல்வேறு மட்டங்களிலும் வெளிப்படுத்தப்படுகிறது. இன்று பாடசாலைகளிலும் 80ஆம் ஆண்டுமுதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வானியல் அறிவானது பல்கலைக்கழகம் வரையில் விரிந்து செல்கின்றது.

சிறுவர்களைவிட வயது முதிர்ந்தவர்கள் இதனை அறிந்துகொள்வதில் காட்டும் ஆர்வம் எல்லோரையும் வியப்படையச்செய்கிறது.

இப்படி அவர் கூறினார்.

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் திரு. ந. ஆனந்தராஜினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வானியல் கருத்தரங்கில் வல்வை மகளிர் மகாவித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, [illegible] உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, [illegible] ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 200க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

## வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 25

வண்ணை – சாந்தை தயர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் தர்மபரிபாலன சபையின் ஐம்பதாவது வருடாந்தக் கூட்டம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5. 00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

## முன்னாள் மேயரின் மனைவியும் மரணம்

கொழும்பு, ஏப். 25

கைக்குண்டு வீச்சில் மரணமான மாத்தளையின் முன்னாள் மேயர் திரு. தம்பிராஜாவின் மனைவி கமலாவும் நேற்று மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் திருமதி கமலா தம்பிராஜாவும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

மரணம் அடைந்த இப்பாய் ஒருவரின் சடலம் இக்கைக்குண்டு வீச்சு நடந்ததினம் மாத்தளைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தது.

## அல்லையூரில் டானியல் நினைவு அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25

மறைந்த பிரபல நாவலாசிரியர் டானியலின் நினைவு அஞ்சலிக்கூட்டம் கடந்த ஞாயிறு பிற்பகல் அல்லையூர் இலக்கியக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்டது.

அல்லைப்பிட்டி மண்கும்பான் மக்களால் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் [illegible] திரு [illegible] தலைமையில் நடைபெற்றது.

வணபிதா கமிலஸ் அடிகளார் சிறப்புரை நிகழ்த்தினார். அல்லையூர் இலக்கிய கலாமன்றத் தலைவர் திரு. பொ. ஜெயரத்தினம், திரு. பொ. ஸ்ரனிஸ்லோஸ் கவிஞர்கள் சாம்பசிவம், பாலசிங்கம் கவிதாஞ்சலி செய்தனர். ஆசிரியர் தே. மகேஸ்வரயமும் பேசினார்.

## ஓய்வூதியம் பெறும் தினங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம் மாதம் ஓய்வூதியம் பின்வரும் தினங்களில் வழங்கப்படும் என தபால் அதிபர் அறிவித்துள்ளார்.

28 04.1986 வட்டுக்கோட்டை, வயாவிளான், மானிப்பாய், உரும்பராய்

29 04 1986 யாழ்ப்பாணம், கொடிகாமம், கைதடி

30.04.1986 தெல்லிப்பளை,கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார்பண்ணை

2 05.1986 சுன்னாகம், அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு,

5 05.1986 பருத்தித்துறை. கொக்குவில், காங்கேசன்துறை

6 05 1986 ஊர்காவற்றுறை,அச்சுவேலி,புங்குடுதீவு, சுழிபுரம்

7.05.1986 இளவாலை, சாவகச்சேரி, வேலணை,

8 05.1986 கரவெட்டி, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், சங்கானை.

## மிகிந்தலைப் பாதை

மட்டக்களப்பு, ஏப் 25

அநுராதபுர சம்பவத்தையடுத்து மூடப்பட்டிருந்த மிகிந்தலைப் பாதை தற்போது மீண்டும் திறக்கப்பட்டு வாகன போக்குவரத்து நடைபெற்றுவருகின்றது.

## லொறி கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 25

அச்சுவேலியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று முகமாலை என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாக அறியவந்துள்ளது.

கடத்தப்பட்ட சமயம் லொறியிலுள் 105 மூடை வெங்காயம், 14 மூடை மிளகாய் பழப்பெட்டி, 22 சிப்பம் கருவாடு என்பன இருந்தன.

வலிகாமம் கிழக்குப் பகுதி விவசாயிகளின் விளை பொருள்களே லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டன.

இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து மேல் நடவடிக்கை என்ன எடுப்பது என்பதுபற்றி லொறி உரிமையாளர் சங்கம் ஆராய்ந்து வருகிறது என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒருவனுக்குத் தெய்வ சிந்தனையை விட உலகிலே நல்ல துணை வேறு இருக்க முடியாது.

-ஓர் அறிஞர்.


# உதயன்

[illegible]

இல. 15, 2வது ஒழுங்கை,
[illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

25 04 86

தொலைபேசி: 24085
22073
த. பெ. 23


## அதிகாரி உறுதிமொழி செயலுருப் பெறுமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில், கைது செய்யப்படும் தமிழர்கள் குறித்து இனிமேல் உறவினருக்கு அறிவிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்து வருவதாக மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. ரொனால்ட் மெண்டிஸ் உறுதியளித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே கைதான 356 தமிழர்கள் குறித்து தகவல் எதுவும் தெரியாது. அவர்களை உறவினர்கள் சந்திக்கவோ, உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் வழங்கவோ அனுமதி இல்லை.

கைதான தமிழ் இளைஞர்களின் பெற்றோரும் ஏனையோரின் உறவினர்களும் தமது இரத்தத்தின் இரத்தங்களுக்கு என்ன நேர்ந்ததோ, கதி எதுவோ என்று நிமிடத்துக்கு நிமிடம் ஏங்கித் தவித்த வண்ணம் இருக்கின்றார்கள். கைதான தமிழ் இளைஞர்களின் வயதான பெற்றோர்கள் படும் வேதனையும் துன்பமும் சொல்லும் தரமன்று.

இந்த நிலைமையை விளக்கி, தமிழ்ப் பெற்றோர், உறவினரின் மனச்சுமையை நீக்க வேண்டும் என்று மட்டக்களப்புப் பிரசைகள் குழுவினர் இணைப்பு அதிகாரியை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்தே இணைப்பு அதிகாரி தாம் சில சாதகமான ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்.

அவரது மனிதாபிமான நடவடிக்கையை பாதிக்கப்பட்ட மக்கள் நிச்சயம் பாராட்டுவர். தமது உறவினரைப் பற்றி அறியவோ நேரில் பார்க்கவோ முடியாது இருண்ட உலகில் இருந்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகக் கூட அமையலாம்.

இலங்கையில் தமிழர்களின் நிலை ஆபத்தானது, என்று, எப்போது, எங்கே உயிர் படையினரின் கொடிய ஆயுதங்களுக்கு இரையாகுமோ என்று தெரியாத நிச்சயமற்ற நிலை.

அரசாங்கத்தின் — அரசபடையினரின் கண்ணுக்குத் தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதச் சந்தேக நபர்கள் தான். அரசாங்க உயர் அதிகாரிகளாக இருக்கலாம், உயிர் காக்கும் டாக்டர்களாக இருக்கலாம்; அவர்களும் தமிழர் என்றால் பயங்கரவாதச் சந்தேக நபர்களாகவே அவர்களுக்குத் தெரிகிறது.

மூன்று வயதுக் குழந்தையும் தமிழ்த் தாய்க்குப் பிறந்திருந்தால் — தமிழ் மண்ணில் பிறந்திருந்தால் அதுவும் பயங்கரவாதச் சந்தேக நபர்தான். நிராயுதபாணிகளான அவர்களைச் சுட்டுவிட்டுப் பின்னர் பயங்கரவாதிகள் என்று "உறுதிப்படுத்தி"யும் விடுகிறது அரசாங்கம்.

இத்தகைய சூழ்நிலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற போர்வைக்குள் அப்பாவிகளைக் கைது செய்து அவர்களைச் சித்திரவதை செய்தும், மனிதாபிமானமற்ற முறையில் இம்சித்தும் கொடுமை புரிவது சர்வசாதாரணமாகக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாயிற்று.

எனினும் மனித துன்பத்தையும் கஷ்டத்தையும் உணர்ந்த ஒரு சில அதிகாரிகளாவது படைகளில் இல்லாமல் இல்லை. மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு அதிகாரியை ஓர் உதாரணமாக வைத்து அதைச் சொல்ல முடிகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் அப்பாவித் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கண்ட கண்ட மாதிரிக் கைது செய்யப்படுகிறார்கள். அப்படிக் கைதானோருக்கு என்ன நடந்தது, அவர்கள் நிலை என்னவாயிற்று என்பதை அறிய முடியாமல் உறவினர்கள் தவிக்கிறார்கள்.

கைதாவோர் குறித்து உறவினர்களுக்கு அறிவித்தல், கைது செய்யப்பட்டதற்கான காரணத்தைத் தெரியப்படுத்துதல், கைதானவரை உறவினர் சந்திக்க வசதி செய்தல்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட வசதிகள் ஏனைய மாவட்டங்களிலும் கட்டாயம் நடைமுறைக்கு வரவேண்டும். அவை செயலுருப் பெற வேண்டும்.

அவை மட்டுமன்றி—

கைதானவர்களை விசாரணை செய்து குறுகிய காலத்தில் விடுவித்தல். மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யாதிருத்தல். தடுப்புக் காவலில் நீண்ட காலம் வைக்கப்பட்டிருப்போரை அவரது வழக்கறிஞர் சந்திக்க அனுமதி அளித்தல். சந்தேக நபராகக் காணப்பட்டால் நீதிமன்றத்தில் இயன்றளவு விரைவில் வழக்குத் தாக்கல் செய்தல். அந்த வழக்குகளை விரைவில் விசாரித்துத் தீர்ப்பு வழங்குதல். — இத்தனை வசதிகளும் செய்யப்பட வேண்டும்.

அப்போது தான் கைது செய்யப்படும் தமிழர்கள், தடுப்புக் காவலில் உள்ள தமிழர்கள் அடிப்படை மனித உரிமைகளில் சிலவற்றையாவது அனுபவிக்க முடியும்.

## நீரிழிவு பற்றிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 25

நீரிழிவு நோய் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை 26 சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் லயன்ஸ் கழகம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் என். சரவணபவானந்தன், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி. சரவணபவானந்தன், கோப்பாய் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். நவரத்தினராஜா, டாக்டர் என். நாகநாதர், டாக்டர் ரி. ராஜரத்தினம் ஆயுர்வேத டாக்டர் ஏ. வி. ராஜரட்ணம் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரைநிகழ்த்துவர்.

அணிசேரா நாடுகள்

# பிரதிநிதிகள் குழு

## குவெய்லா சந்திப்பு

நியூயோர்க், ஏப் 24

பாரத வெளியுறவு அமைச்சர் பலிராம் பகத் தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தை நேற்றுச் சந்தித்தது.

அமெரிக்கா லிபியா மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல் பற்றிய தமது கவலையையும் அதிர்ச்சியையும் இந்தக் குழு செயலாளர் நாயகத்துக்கு விளக்கிக் கூறியது.

மேற்படி தாக்குதல் விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையைக் கூட்டுமாறும் அந்தக்குழு மேலும் கோரிக்கை விடுத்தது. அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்ட 6 நாடுகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு திரு பலிராம் பகத் தலைமை வகிக்கிறார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடனான சந்திப்பில் உலக சமாதானத்துக்கு இடையூறாக இருக்கும் பல விடயங்களும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆப்கானிஸ்தான் விவகாரம், ஈரான்— ஈராக் மோதல், தென்- ஆபிரிக்கா பிரச்சினை மற்றும் ஆயுதக் குறைப்புப் போன்ற விடயங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டன.

இந்தக் குழுவின் கோரிக்கையின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் அவசரக் கூட்டத்தை செயலாளர் நாயகம் இன்று கூட்டுகிறார்.

அணிசேரா அமைப்பின் ஒருங்கிணைப்புப் பணியக அமைச்சர்கள் மட்ட மாநாட்டையும் அணுகுமுறைகளையும் திரு. குவெய்லா மேலும் பாராட்டியுள்ளார்.

### ஹெல்மட்கோல் பாரத விஜயம்

பொன், ஏப். 24

பாரதத்துக்கு எதிரான பயங்கரவாதிகளை மேற்கு ஜேர்மனி அரசு ஆதரிக்காது. அவர்களுக்கு புகலிடமும் அளிக்காது.

இவ்வாறு மேற்கு ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோல் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியிலேயே திரு. ஹெல்மட்கோல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மே. ஜேர்மன் பிரதமர் 8 நாள் அரசமுறைப் பயணம் மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிறு அன்று பாரதம் வர இருக்கிறார்.

## ஸ்டாலினின் மகள் மர்ம மறைவு

சிக்காகோ, ஏப்ரல் 24

காலஞ்சென்ற சோவியத் தலைவர் ஸ்டாலினின் மகள் ஸ்வெட்லானா அலிலூயேவா மாயமாக மறைந்துவிட்டார்.

ரஷ்யாவில் கடந்த ஓராண்டு வாசத்தின் பின் அண்மையில்தான் அமெரிக்காவுக்கு அவர் திரும்பி இருந்தார்.

"அலிலூயேவா வாழ்ந்த விஸ்கொன்ஸின் கொலனியில் அவர் நண்பர்களுடன் மகிழ்ச்சிக் களிப்புடன் காணப்பட்டார். தனிமையில் இருக்கவும் சில நாட்கள் அவர் விரும்பியிருந்தார்."

இவ்வாறு அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

1970 தொடக்கம் 1973 வரை அலிலூயேவா வில்லியம் வெஸ்லி பீட்டர்ஸ் என்பவரை மணம்முடித்திருந்தார்.

இதற்கு முன் வெஸ்லி பீட்டர்ஸ் பிராங் லிலோய்ட் உறைட் என்பவரின் மகளை மணம் செய்து இருந்தார். இந்த உறைட் தான் விஸ்கொன்ஸின் கொலனியின் சிற்பி எனக் கூறப்படுகிறது.

அலிலூயேவா காணாமற் போனது இந்தக் காரணங்களின் பின்னணியாக இருக்கலாம் என்ற சந்தேகங்களையும் இப்பொழுது எழுப்பியுள்ளது.

### உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

புதுடில்லி, ஏப்ரல் 24

பாரதத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தொகை 25 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மத்திய சட்டத்துறை அமைச்சர் லோக்சபை விவாதத்தின்போது இதை அறிவித்தள்ளார்.

நீதிமன்ற எண்ணிக்கையைத் திருத்த மசோதா மீதான விவாதம் நடந்த போதே அமைச்சர் இதை அறிவித்துள்ளார்.

ஊதிய உயர்வு மற்றும் படித்தொகை உயர்வு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தஞ்சைப் பல்கலைக் கழகத்துக்கு தமிழ் நாடு அரசு நிதி

சென்னை, ஏப்ரல் 24

தஞ்சைப் பல்கலைக்கழக பராமரிப்புக்கென இவ்வாண்டு ஒதுக்கீடாக தமிழ்நாடு அரசு 90 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

இந்தத் தகவலை அறிவித்த தமிழ்நாடு அமைச்சர் நெடுஞ்செழியன் பல்கலைக்கழகத்தில் கருத்துத் தெரிவித்தபோது;

தமிழ்மொழி ஆராய்ச்சி இன்னும் வளர்ச்சி காணவேண்டும் அந்தத் துறையில் தஞ்சைப் பல்கலைக் கழகம் ஈடுபட்டுப் பணி பல ஆற்றவேண்டும் என்றார்.

மனித இயல்துறை சார்ந்த நூல்கள் மற்றும் சமூக இலக்கிய நூல் திரட்டு ஆகிய ஆக்கங்கள் அங்கு தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவியை இன்னும் தமிழ்நாடு அரசு வழங்க ஆயத்தமாக இருப்பதாகவும் திரு. நெடுஞ்செழியன் உறுதி கூறினார்.

## ஐரோப்பிய சமூக தீர்மானத்துக்கு அடி

### அந்த நாடுகளின் பிரஜைகளை வெளியேறுமாறு லிபியா உத்தரவு

லண்டன், ஏப். 24

லிபியாவுக்கு எதிராக ஐரோப்பிய சமூக நாடுகள் எடுத்துள்ள தீர்மானத்துக்குப் பதிலடி கொடுக்கும் முகமாக லிபியாவிலிருந்து ஐரோப்பிய சமூக நாட்டவர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

திரிப்போலியிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரியிடம் இந்த நடவடிக்கை பற்றிய தீர்மானம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சகம் இந்தத் தகவலை அறிவித்துள்ளது.

இதனிடையே ஐரோப்பிய சமூக நாடுகளும் பிரிட்டனும் அமெரிக்காவின் அடிவருடிகள், கைப்பொம்மைகள் என லிபியா கடுமையாகக் கண்டித்துள்ளது.

லிபிய பயங்கரவாதத்தை அடக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

லிபியாவின் பயங்கரவாத நிலைகள் மீதே அமெரிக்கத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் சிவிலியன் பகுதிகள் இலக்கு வைக்கப்படவில்லை எனவும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை பயங்கரவாத இலக்குகள் பார்த்து அடிக்கப்பட்ட போதும் சிவிலியன்களும் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அமெரிக்கா முதல் முறையாக ஒப்புக்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

### வெளி உலகில்

### ஜெயகாந்தன் விருது பெறுகிறார்

சென்னை, ஏப். 24

தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. ஜெயகாந்தனுக்கு இராஜராஜன் விருது வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சர் திரு. நல்லசாமி இந்த விருதை அவருக்கு வழங்குவார்.

ஜெயகாந்தனின் சுந்தர காண்டம் நூலுக்கு 1 லட்சத்து 1 ரூபா பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

53 வயதான ஜெயகாந்தன் நாவல்கள் சிறுகதைகள் சிந்தனைக்கட்டுரைகள் மொழிபெயர்ப்புகள் என்று பல நூற்றுக் கணக்கான நூல்களை எழுதியுள்ளார்.

# பிறவி எனும் பிணி நீங்குதற்கு சக்தியின் திருவடி பற்றுக்கோடு

சக்தி இல்லையேல் சிவமில்லை' என்பது ஆன்றோர் வாக்கு. எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும், தாயாகவும் தோழனாகவும் தலைவனாகவும் பக்தி செய்து வழிபடும் மரபு சைவ சமயத்தில் உண்டு.

இவற்றுள் அவனைத் தாயாக வழிபடும்முறை தலையாயது.

அன்பு, தாய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றிற் சிறந்தவள் தாய். தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.

தாயை அணுகக் குழந்தை ஒருபொழுதும் அஞ்சுவதில்லை. தன் பிள்ளை நன்றே செய்தாலும் தீதே செய்தாலும் உயர்நிலை அடைந்தாலும் தாழ்வையுற்றாலும் ஒரு தாயின் அன்பு மாறுபடாது.

தாய் அன்பிலும்மேலானது இறைவன் உயிர்களிடத்து செலுத்தும் அன்பு. இதனாலேயே, 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்றும், 'தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்' என்றும் நாயன்மார் பாடியிருக்கின்றார்கள்.

அன்புதான் இன்பவூற்று. அன்புதான் இன்ப ஜோதி. அன்புதான் உலக மகாசக்தி. அன்பே சிவம் என்பது ஆன்றோர் வாக்கு.

இவ்வுலகம் முழுவதும் ஒருசக்தியின் ஆற்றலால் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மேகம் மின்னி இடித்துத் தாரை தாரையாக மழை பொழிகின்றது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மலைகளின் வழியே அருவிகள் வேகமாகப் பாய்ந்தோடி விழுகின்றன. சுற்றிச் சுழன்று சூறாவளி போலவும் மெல்ல இவர்ந்து தென்றல் போலவும்

### பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவு மிக்கவள்

சாற்று வீசுகின்றது. இரவு பகலாகிறது. பகல் இரவாகிறது.

இவற்றுக்கெல்லாம்



மூலகாரணமாகஒரு சக்தி உண்டல்லவா?

இறைவனோடு பிரிவின்றி உள்ளதாகிய சக்திதான் அது. அதனையே நாம் தாய்த்தெய்வமாகப் போற்றுகின்றோம். அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள்.

'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்பது சைவ சித்தாந்தம்.

'சக்தி இருந்தால் செய் இல்லையேல் சிவனே என்றிரு' என்பது முதுவாக்கியம்.

அண்ட கோடி சராசரங்கள் யாவற்றுக்கும் அன்னையாக விளங்குபவள் ஆதிபராசக்தியாகும்.

அவளது கருணையில்லாமல் ஒரு க்ஷண நேரம் கூட நாம் உயிர்வாழ முடியாது என்பதை நாம் மனத்திற் கொள்ளவேண்டும்.

ஆகவே சைவ மக்களாகிய நாம் சக்தி வழிபாடு செய்து அவளின் [illegible] உணர்ந்து உய்தி பெற முயலவேண்டும்.

தாயின் வயிற்றிலே கருவுற்ற நாள்முதல் எல்லா வகையிலும் உறுதுணையாயிருந்து திருவருள் புரிபவள் ஆதி சக்தியாகும்.

தாயின் கருப்பை இருள் நிறைந்தது. வெளிச்சமே இராது. அங்கு சிசு இருக்கும் போது சுவாசிப்பதில்லை. தாயின் சுவாசம் மூலமாகவே சேய்க்கும் சுவாசம் நடைபெறும். அத்தகைய வேளையிலும் தோன்றாத் துணையாய் உள் நின்று காப்பவள் சக்தியாகும்

கல்லினுள் தேரைக்கும் கருப்பையில் வளரும் சிசுவிற்கும் உணவு

### ஞானக்கதிர்

தருபவளும் அவளே. பிறந்த நாள்முதல் இறக்கும்நாள்வரை உற்றதுணையாய் விளங்கும் சக்தியை நன்றி மறவாது பணிய வேண்டியது நமது கடமையாகும்.

தாய் மூலமாகத் தந்தையிடம் அறிந்துக் காரியம் சாதித்து விடலாம் அதுபோலவே பிறவிப்பிணியில் உழலும் நாம் இறைவனின் திவ்ய பாதாரவிந்தங்களைப் பெற வேண்டுமேயானால் முதலில் அன்னையிடம் முறையிட வேண்டும். சக்தி வழிபாடு செய்வதன் மூலம் சிவத்தை அடைந்து விடலாம்.

அழுது சிணுங்கிக் காரியம் சாதிக்கும் குழந்தையைப்போல நாமும் இறைவியிடம் அழுது தொழுது வணங்கித் துக்க சாகரத்தினின்றும் நீந்திக் கரைசேர்ந்து விடலாம்.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக நம்பிக்கை இருக்கவேண்டும். நம்மை முற்றாக அவளிடம் அர்ப்பணித்து 'எல்லாம் உன் பொறுப்பு. நீயே என்னை வழிநடத்து' என்று விட்டுவிட வேண்டும். அந்த நிலை எமக்கு வர வேண்டும். அந்தப் பரிபக்குவநிலை எமக்கு வருவதற்கும் பிறவிப்பிணி நீங்குவதற்கும் ஆதிசக்தியான இறைவியின் திருவடிகளையே பற்றுக்கோடாகப் பற்றிக் கொள்ள வேண்டும் அப்போதுதான் நாம் பிறவிப்பயனைப் பெற்றவர்களாவோம்.

இளஞ் சைவப்புலவர்:
இராசையாஸ்ரீதரன்



### பொய்யாமொழி

குறள்:

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.

பொருள்:

பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறுபோல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லையாகும்.

## "பரா அத்" இரவின் மகத்துவம்

["பரா அத்" இரவு நேற்றாகும். அதை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.]

இறைவன் மக்களுக்கு வழங்கியுள்ள பல அருட்கொடைகளுள் ஒன்றே "பரா அத்" இரவு ஆகும். ஷஃபான் மாதம் பிறை 15ஆம்நாளே "பரா அத்" இரவு என அழைக்கப்படுகின்றது.

"பரா அத்" எனும் அரபுச் சொல்லினுடைய அர்த்தம் "நரகத்திலிருந்தும் உரிமை விடப்படுதல்" என்பதாம்.

இதனது கருத்து இப் [illegible]

அளிக்கின்ற மகத்துவம் மிக்க புனித இரவாக ஷஃபான் பிறை 15 ஆம் நாள் "பரா அத்" இரவை இறைவன் அமைத்துள்ளான்.

இந்த இரவைப்பற்றி இறைவன் தனது திருமறையாம் அல்-குர்ஆனில் "ஆயிரம் இரவுகள் வருவதுண்டு; ஆனால் ஓர் இரவின் மதிப்பையும் மகத்துவத்தையும் யாராலும் மதிப்பிடவோ, மட்டிடவோ முடியவே முடியாது. இவ்வேதத்தின் மீது சத்தியமாக நிச்சயமாக இவ்விரவை மிக்க பாக்கியமுள்ள இரவாக அமைத்து வைத்தோம்

மௌலவி ஏ. எம். அப்துல் அஸீஸ்

புனிதமான இரவில் இறைவன் அவனது கட்டளைக்கு மாறாக நடந்து பாவங்கள் புரிந்து நரகவாதிகள் எனத் தீர்மானிக்கப்பட்ட மக்களை அவர்களது மன்றாட்டத்தை ஏற்று நரகிலிருந்தும் விடுதலை அளிக்கப்படும் இரவு என்பது ஆகும்.

மனிதன் இவ்வுலகிலே செய்யும் நற்காரியங்களைக் கொண்டு மறுமையில் நிலையான அவ்வுலகில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சுவர்க்கத்தை அடைவான்; அல்லது அவன் இவ்வுலகில் பாவமான காரியங்களை இறைவனது கட்டளைகளுக்கு மாறான செயல்களைப் புரிந்தவனாயின் மறு உலகில் மிகப் பயங்கரமான நரக நெருப்பிலும் தள்ளப்படுகின்றான்.

இத்தகைய கொடிய நரகில் நின்றும் விடுதலை

உண்மையாகவே நாம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றவர்களாகவே இருக்கின்றோம். புவியில் நிகழக் கூடிய சகல காரியங்களும் இந்த இரவில் தான் நம்முடைய கட்டளைப்படி தீர்மானிக்கப் படுகின்றன." எனக் கூறியுள்ளான்

இதனாலேயே "லைலதுஷ் ஷஹா"(?) கணக்குப்பதியப் படும் இரவு எனவும் அழைக்கப்படுகிறது. அதாவது ஹிஜ்ரி 1406 ஆம் ஆண்டு ஷஃபான் பிறை 15இலிருந்து 1407 ஆம் ஆண்டு ஷஃபான் 14வரையுள்ள ஒரு வருடகாலத்தில் ஒவ்வொரு மனிதனும் செயற்படக் கூடிய விதம் பற்றியும் அவனது நற்செயல் தீய செயல்கள் பற்றியும் இவ்விரவில் இறைவன் மலக்குகளைக் கொண்டு பதிவு செய்கின்றான்.

ஓர் அரசாங்கம் எதிர்வரும் ஓராண்டு காலத்தில் எந்தெந்தத் துறைகள் மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்கும். கல்விக்குசுகாதாரத்திற்கு பாதுகாப்பிற்கு என ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு தொகை செலவிடப்படும் என வரவு செலவுத்திட்டத்தை முன்னரே தயாரிப்பது போன்று ஒவ்வொரு மனிதரும் எதிர்வரும் ஓராண்டிச் செய்யக்கூடிய நன்மை, தீமை, அவனது

(4 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BECON** 156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
87 A/L 88
பொருளியல் - திரு. வரதராஜன்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
அளவையியல் - திரு. S. S. மகேந்திரன்
வர்த்தகம், நிதி - திரு. ரட்ணம்
இந்து நாகரிகம் - திருமதி அருள்நங்கை
புவியியல் - திரு. சண்
தமிழ்-அரசியல் வரலாறு - விரிவுரையாளர்கள்
ஆரம்பம்: 26-4-86 சனி 9.30

# உதயன்

25. 04. 1986 வெள்ளிக்கிழமை

A/L 88 விஞ்ஞானம்
சனி — ஞாயிறு
7.30 App. Maths - Mr. [illegible]
8.30 Pure Maths - Mr. [illegible]
9.30 Chemistry - Mr. [illegible]
10.30 Physics - Mr. [illegible]
12.00 Botany - Mr. [illegible]
1.30 Zoology - Mr. தம்பிராஜா
ஆரம்பம்: 26 – 04 – 86
விபரங்களுக்கு: **BECON** 156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

### எரிபொருள் இல்லை

# வடபகுதி பஸ் சேவை நிறுத்தப்படும் நிலை

யாழ்ப்பாணம், ஏப் 25
வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தும் பஸ் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமையுடன் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி அச்சம் தெரிவித்திருக்கிறார் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம்.

கையிருப்பில் உள்ள எரிபொருள் முடிவடையும் கட்டத்தில் உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் கொண்டு வருவது கஷ்டமான காரியம்.

இது பற்றி மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளேன். பஸ் சேவை ஸ்தம்பிதம் அடையாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தான் எடுத்து வருவதாகவும் திரு கனகரத்தினம் சொன்னார்.

## பி. எல். ஏ. மற்றும் ஈ. பி. ஆர். எல். எப். விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
சொந்த நலன்களை மக்களின் நலன்களுக்கு கீழ்ப்படுத்துவோம் என்ற தலைப்பில் மக்கள் விடுதலைப்படையும் (பி. எல். ஏ.) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (ஈ. பி. ஆர். எல். எப்.) அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அறிக்கையில் கூறப்படுவதாவது:

எதிரிப் படைகளைத் தோற்கடித்து, ஈழமக்களின் விடுதலையை வென்றெடுக்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையில் மக்கள் விடுதலைப்படை போரிடுகிறது.

ஒழுக்கமும், கட்டுப்பாடும் மக்கள்மீது நம்பிக்கையும் நேசமும் கொண்ட படை மட்டுமே எதிரிப்படைகளை வெல்லும் வலிமைகொண்டதாகும்.

போராட்டத்தின் போக்கில் எந்த ஒரு ஸ்தாபனமும் தனிநபரும் தவறு செய்வது இயல்பு. தவறு சுட்டிக்காட்டப்படும்போது தவறை உணர்ந்து திருந்துவதன் மூலமே போராட்டத்தின் மீதான விசுவாசத்தை உறுதிப்படுத்த முடியும்.

மக்களின் நலன்களுக்கு எதிராக சொந்த நலன்களை முதன்மைப்படுத்தும் நபர்கள் போராட்டத்தில் உச்சக்கட்டத்தில் அதிகரிக்கவும் கூடும்.

மக்களும் போராளிகளும் விழிப்போடு இருந்து நீக்கான சக்திகளை முளையிலே கிள்ளி எறிய முடியும்.

இந்த அடிப்படையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தேவி, அம்பிகா ஆகியோரை மக்கள் விடுதலைப் படையில் இருந்து நிரந்தரமாக நீக்கியுள்ளோம்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பரா அத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்ற தாழ்வுபற்றி இறைவன் இவ்விரவிலேயே தீர்மானம் செய்கின்றான்.

இந்த வகையிலும் இவ் இரவு மிக முக்கியத்துவம் வாய்ந்த இரவாகின்றது.

இவ் இரவு இறைவனது நற்பாக்கியங்களைப் பெறும் இரவாக அமைவதால் "லைலதுன் முபாறக்" பாக்கியம் நிறைந்த இரவு எனப்படுகிறது.

அது மட்டுமல்ல "லைலதுன் றஹ்மத்" இருமையுள்ள இரவு எனும் பெயரையும் பெறுகின்றது.

இந்தப் புனித இரவில் இறைவன் தனது அடியார்களுக்கு நற்பாக்கியங்களை வழங்குகின்றான். அவனது அருளை, இருமையைப் பொழிகின்றான்.

இதனால் தான் பெருமானார் (ஸல்) அவர்கள் "பரா அத்" இரவில் நீங்கள் நின்று வணங்குங்கள். அதன் பகலில் நோன்பு வையுங்கள்" எனக் கூறினார்கள்.

அதற்கான காரணங்களை அவர்கள் விளக்கும் போது "ஷஃபான் மாதம் 15 ஆம் நாளில் இறைவன் முன் வானத்திற்கு இறங்கி வருகிறான். அவன் நல்லடியார்களைப் பார்த்து என்னிடம் கேட்பவர்கள் உண்டா? நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்னிடம் பாவ மன்னிப்பு கோருபவர்களுண்டா? நான் அவர்களை மன்னிக்கத் தயாராகவுள்ளேன் என்னிடம் உணவை விஸ்திரணமாக்கும்படி கேட்பவர்களுண்டா? நான் அவர்களுக்கு விஸ்திரணமாக உணவளிக்கக் காத்திருக்கிறேன் என பரா அத் இரவு ஆரம்பிப்பதிலிருந்து மறு நாள் சூரிய உதயம் வரை கேட்டுக்கொண்டே இருக்கிறான்" என நாயகம் (ஸல்) அவர்கள் விவரித்தார்.

## நினைவுமலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 25
அமரர் சாமுவேல் இம்மானுவல்போசவ் நினைவு மலர் வெளியீட்டுவிழா நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுகிறது.

வெளியீட்டு விழாவை கொட்டடி மாலை 5 மணிக்குச் சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் திருப்பலியும் இரங்கல் உரையும் இடம்பெறும்.

## காந்தம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 25
காந்தம் மாணவர் இதழ் வெளி வருகிறது. இதன் வெளியீட்டு விழா யாழ் இலக்கிய வட்ட இலக்கியப் பேரவை செயலாளர் திரு. எஸ் சபாரத்தினம் தலைமையில் இன்று 25 ஆம் திகதி நடைபெறும்.

யாழ் அத்தியடி காந்தம் காரியாலயத்தில்பிற்பகல் 3 30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

## ரெலா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
தமிழீழ விடுதலை இராணுவத்தின் (ரெலா) பெயரைக் களங்கப்படுத்துவதற்காக சில பிற்போக்குவாதிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி கொள்ளை, வாகன, ஆட் கடத்தல் போன்ற குற்றச் செயல்களைச் செய்து வருகின்றனர்,

இத்திய சக்திகளை கடுமையாக எச்சரிக்கின்றோம்.

இப்படி தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா) அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது

இப்படிப்பட்ட தீயசக்திகள் தொடர்ந்து எமது ஸ்தாபனத்தின்பெயரைக் கூறி குற்றச்செயல்களைப் புரிந்தால் கடுமையான தண்டனைவழங்க வேண்டிவரும் என்று ரெலா தனது அறிக்கையில் எச்சரித்துள்ளது

## செல்வநாயகபுரம் சம்பவம் குறித்து புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25
அச்சுவேலி, செல்வநாயகபுரத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (யாழ் மாவட்டம்) விடுத்த அறிக்கையின் சாரம் வருமாறு;—

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் கூர்மையடைந்துவரும் இவ்வேளையில் எமது போராட்டம் அனைத்து சமூக ஒடுக்குமுறைகளுக்கும், மேலாதிக்கவாதிகளுக்கும் எதிரானது என்பதில் எச்சரிக்கையோடும் விழிப்போடும் எமது மக்கள் செயல்படவேண்டியது மிக அவசியமாகும்.

இவ்வகையில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் எச்சசொச்சமான சாதி அமைப்பும். அதன் பிற்போக்குக் கருத்துருவங்கள் அழிந்து வருவதும், அது அழிக்கப்பட வேண்டும் என்பதிலும், சமூக உணர்வுள்ள அனைத்து சக்திகளும் கவனிக்க வேண்டியதொன்றாகும்.

இந்நெருக்கடி மிக்க காலப்பகுதியில் தன்வாழ் நிலையை இழந்து வரும் தமிழ்பேசும் மக்களின் குறிப்பிட்ட உழைக்கும் மக்களை வேதனைக்குள்ளாக்குவது மிகமோசமான சாதிக்கருத்துருவங்களைத் தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்துவதும், தமது மேலாதிக்கக் கரங்களை நீட்ட முற்படுவதும் கண்டிக்கப்படவேண்டியது மட்டுமன்றி தண்டிக்கப்படவேண்டியதுமாகும்.

இந்நிலப்பிரபுத்துவ எச்சசொச்ச பிற்போக்குவாதிகளை இனங்கண்டு இவர்களுக்கெதிரான போராட்டத்தையும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பலப்படுத்துவதன் மூலமே இவற்றை எமது சமூகத்தில் இருந்து அகற்றமுடியும்.

அச்சுவேலியில் செல்வநாயகபுரம் என்ற பகுதியில் ஒருவருக்குச் சொந்தமான தோட்டத்தில் மற்றவர் ஒருவரின் ஆடு மேய்ந்தது தொடர்பாக எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

விசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்டவர் தண்டிக்கப்பட்டுக் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

எனவே இது தொடர்பாக உண்மை நிலையை உணர்ந்து மக்கள் தொடர்ந்தும் சாதிமுரண்பாட்டைக் கூர்மைப்படுத்தாமல், வீதித்தடைகளை அகற்றுமாறுவேண்டுகின்றோம்.

மேலும் சுயநலமிகளின் இவ்வாறான தவறான போக்கிற்கு எமது எவரும் சார்பாக இல்லாமல் விழிப்புடன் செயல்படுமாறும் வேண்டுகிறோம்.

இது தொடர்பாகஎமது ஸ்தாபனத் தோழர்கள் கூட சிலரால் தாக்கப்பட்டது கண்டிக்கப்படவேண்டியதும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும்.

அடக்குமுறைகள் எங்கிருந்து எவ்வழியில் வந்தாலும் அவை மக்கள் திரளினால் அழித்தொழிக்கப்பட்டதாகவே வரலாறு அமைகிறது.

## வீதித்தடை

கரவெட்டி, ஏப். 25
அச்சுவேலி செல்வநாயகபுரச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி-வயாவிளான் பகுதியில் நேற்றுக் காலை வீதித் தடைபோடப்பட்டிருந்தது.

இந்த வீதியால் நேற்று வந்த வாகனங்கள் திருப்பி விடப்பட்டன.

இதன் விளைவாக பிரயாணிகள் பெரும் சிரமப்பட்டனர்.

## புதிய...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும் என்று கூறப்படவில்லை.

புதிய யோசனைகள் பற்றிய விரிவான விளக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து ஆராய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நாளை(சனிக்கிழமை) கூடுகிறது.

திரு. ரொமேஷ் பண்டாரியும் சனிக்கிழமை சென்னை வருகிறார். சகல தமிழர் அமைப்புக்களுடனும் திரு. பண்டாரி பேச்சுக்கள் நடத்துவார்.

பேச்சுக்களின் தன்மையைப் பொறுத்தே திரு. பண்டாரியின் கொழும்பு விஜயத்துக்கு திகதி நிர்ணயிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது

இதனிடையில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு சென்னை திரும்பும் முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்[illegible] பார்க்கப்படுகிறது.

புதிய யோசனைகள் கூட்டணி, மற்றும் தமிழ்

## கந்தளாய் அகதிகளுக்கு உதவ ஏற்பாடு

கொழும்பு, ஏப் 25
கந்தளாய்குளம்உடைந்ததால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரண உதவி வழங்க இந்து சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ விரும்புவோர் பம்பலப்பிட்டி, காலி வீதி, 11 ஆம் இலக்க இல்லத்தில் உள்ள ஒன்றியப் பணிமனையில் உடுபுடவைகள், பணமாகவோ கையளிக்கலாமெனஅறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பலாலிவீதி, 52 ஆம் இலக்கத்தில் உள்ள விஸ்வ ஹிந்து பரிஷத் அலுவலகத்தில் கையளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது

திருகோணமலை இந்து வாலிபர் சங்கத்தின் வேண்டுகோளை அடுத்தே இந்த சங்க ஒன்றியம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஏற்பாடுகளைச் செய்துவருவதாக அதன் தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமி தெரிவித்தார்.

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 25
சமூக சேவையாளர் திரு சண்முகம் இராசையாவின் சேவை நலம் பாராட்டுவிழா இன்று 25 ஆம் திகதி நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படவுள்ளது.

இன்று மாலை நடைபெறும் இவ்விழாவுக்கு நிலையத் தலைவர் திரு. இ. இரவீந்திரராஜா தலைமை வகிப்பார்.

சிறப்புப் பேச்சாளர்களாக யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் செயலாளர் திரு. சி. இ. வரதராஜா, ஞானஜோதி சனசமூக நிலையத் தலைவர் திரு. ஆ. கருணாநந்தன் கம்பன் கழகத் தலைவர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொள்வர்.

## மண்டூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
துக் காலுடன் புகுந்து தேடுதல் நடத்தியதாகவும் இதனால் ஆலயம் சேதமடைந்துள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது. ஆலய மணியும் சேதமாக்கப்பட்டதாம்.

சுமார் 100 பெண்கள் மண்டூர் பிரதேச சபைத் தலைவர் செழியன் பேரின்பநாயகம் தலைமையில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. கா. வேல்முருகுவிடம் இது சம்பந்தமாக முறையிட்டனர்.

மண்டூர் 3 ஆம் குறிச்சியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான பயணிகள் படகும் சிப்பாய்களினால் எடுத்துச் செல்லப்பட்டது.

## அநுராதபுரம்.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ளது,

அநுராதபுரம் இரண்டாவது நாளாக நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது. சன நடமாட்டமே காணப்படவில்லை.

புதன் பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ ஆகியவற்றினால் பீதியுற்ற பெரும்பாலான மக்கள் தமக்கள் உடைமைகளையும் எடுத்துக்கொண்டு நகரின் சில பகுதிகளில் இருந்து வெளியேறினர். பதற்றம் இன்னும் தணியவில்லை.

அமைப்புக்களினால் நிராகரிக்கப்படும் என்று [illegible] [illegible] வட்டாரங்களில் [illegible] கொள்ளப்படுவதாக இங்கு அறிய வந்தது

# விளையாட்டரங்கு

சென் நிக்கிலஸ் சுற்றுப்போட்டி

## சில்வர் ஸ்ரார்ஸ் அணி முதலாவது ஆட்டத்தில் வெற்றி

விளையாட்டுச் செய்தியாளர்:- சண் ஜோன்சன்

யாழ்ப்பாணம், ஏப் 25
உதைபந்தாட்டப்போட்டியில் சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. இந்த அணி அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியை 8க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது

நாவாந்துறை சென். நிக்கிலஸ் ஆலய திருநாளை முன்னிட்டு சென். நிக்கிலஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட நொக் கவுட் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாவது ஆட்டமே நேற்று முன் தினம் நடைபெற்றது

திருமதி செல்வம் அன்னம்மா ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்திற்கான இந்தப் போட்டியை வண பிதா பி. எம். இம்மனுவேல் அடிகள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

முதலாவது ஆட்டத்திற்கு எஸ் அல்வின் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கோவளம் அணி சாம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 25
காரைநகர், வாரிவளவு நல்லியக்க சபையினரால் நடத்தப்பட்ட 13 -வது வருடாந்த 30 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கோவளம் இளைஞர் மன்றம் சாம்பியனானது.

இறுதியாட்டத்தில் கோவளம் இளைஞர் மன்றம் அணி களபூமி விளையாட்டுக்கழக அணியை 10 விக்கெட்டுகளினால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய களபூமி அணி 40 ஓட்டங்களைப் பெற்றது கோவளம் இளைஞர் மன்ற பந்துவீச்சாளர்களான ரி. இவகுமார் ஓட்டம் எதும் கொடுக்காமல் 3 விக்கெட்டுகளையும், எஸ். ஞானசோதி 4 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய கோவளம் அணி விக்கெட் இழப்பின்றி 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது ரி. சிவகுமாரன், ஏ. ஞானேஸ்வரன் ஆகியோர் முறையே 20, 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

கோவளம் அணிக்கு ரி. சிவசோதியும், களபூமி அணிக்கு ரி. திருச்செல்வமும் தலைமை வகித்தனர்.

## முன் எச்சரிக்கை நடவடிக்கை..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

2) பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பையும் சர்வதேச விமானநிலையம் என்ற போர்வையில் அமெரிக்க! விமானத்தளம் அமைக்கும் திட்டத்தையும் கைவிடுவதுடன் அயலிலுள்ள மக்களை அப்புறப்படுத்த மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான விமான ஹெலிக்கொப்டர் தாக்குதல்களையும் உடன் நிறுத்த வேண்டும்.

3. கிளிநொச்சி, வவுனியா, அக்கரைப்பற்று, மூதூர் பகுதிகளில் வயல்களை நாசமாக்கியும் பொதுமக்களைக் கட்டுக்கொன்றும் கிராம மக்களை விரட்டியடிக்கும் கெடுபிடிகளைக் கைவிடல் வேண்டும்.

4. பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற போர்வையின்கீழ், வடக்கு, கிழக்கு, மலையகப் பிரதேசங்கள் உட்பட ஏனைய பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

5. கடல் சட்டம் நீக்கப்படுவதுடன், கரையோரமக்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படல் வேண்டும், மன்னார் கரையோரங்களில் ஆயுதம் தாங்கிய சிங்களவர்களை நிறுத்தி கடலாதிக்கத்தைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிடல் வேண்டும்.

மேற்படி இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாது அலட்சியம் செய்யப்படுமாயின் நாட்டின் சகல பகுதிகளிலும் எமது இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுமென்பதை முன் எச்சரிக்கையாக கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

தலைமன்னார் பகுதியில் அமைக்கப்பட முயலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் 9-4-86 அன்று எம்மால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் ஒரு பொலிஸ் உயரதிகாரி உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். இதில் ஆயுதப்பயிற்சி பெற்ற இரு சிங்கள ஊர்காவல் படையினரும் சிக்கிகொண்டனர் இவற்றுடன் 18-3-86 அன்று கொழும்பில் "கால் நிரப்பு நிலையம்" ஒன்றும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று நாடாளுமன்றம் கூடுகிறது

கொழும்பு, ஏப். 25
நாடாளுமன்றம் இன்று கூடுகிறது. அக்மீமனத் தொகுதி புதிய எம் பி. பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்.

## அலரிக்காய் தின்று தாயார், 4 பிள்ளைகள் மரணம்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஏப்.25
இளம் தாயார் ஒருவர் தாமும் அலரிக்காய் உட்கொண்டு, தமது ஐந்து குழந்தைகளுக்கும் அலரிக்காய்உண்ணக்கொடுத்தார்

தாயாரும் 4 குழந்தைகளும் மரணம் அடைந்தனர். ஒரு குழந்தை மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் உள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு கல்முனைவீதி புதுக்குடியிருப்பு என்னுமிடத்தில் நடந்தது.

அதேயிட வாசியான தங்கமலர் (26 வயது), மதிவதனி (10 வயது), தேவிகா (8 வயது) சோதேஸ்வரன் (5வயது) ரூபி (4 வயது), செல்வி (6 மாதம்) ஆகியோர்தான் அலரிக்காய் தின்றவர்கள் ஆவர்.

இவர்களில் ரூபி என்ற குழந்தை மயக்க நிலையில் காணப்படுகிறது.

தாயார் அதே இடத்தில் மரணமானார் ஏனைய நான்கு குழந்தைகளும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்பு மரணமானார்கள்.

இந்த மரணங்கள் தொடர்பான மரண விசாரணையை மட்டக்களப்பு நகர மரணவிசாரணை அதிகாரி திரு த. சிவநாதன் நடத்தினார்.

மரண விசாரணையில் தெரியவந்ததாவது:

கணவன் 10 ஆம் திகதி சீட்டுப்பணம் 100 ரூபா கட்ட வேண்டும் பணம் இல்லாத நிலையில் கணவன் சைக்கிள் கரியரை விற்று சீட்டுப் பணத்தைக் கட்டினார்.

இதனை அறிந்த மனைவி சைக்கிள் கரியரைக் கொண்டுவரும்படி கணவரை வலியுறுத்தினார்.

சம்பவதினம் மதிய உணவில் அலரிப்பருப்பு கலந்து மனைவி குழந்தைகளுக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டார்.

மரண விசாரணை முடிவில் பெண்ணின் மரணம் தற்கொலையெனவும், குழந்தைகள் மரணம் கொலையெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ஐ. பி துரைரத்தினம் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25
அமரர் ஐ. பி. துரைரத்தினத்தின் முதலாம் ஆண்டு அஞ்சலிக் கூட்டம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. ஆ. ந. ராஜேந்திரன் தலைமையில் ஞாயிறு நடைபெறும்.

உதவி அரச அதிபர் திரு.சி. இராஜரத்தினம் அமரர் துரைரத்தினத்தின் உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைப்பார்.

## முகாம்களுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து முகாம்களைத் தாக்க முயற்சி செய்து வருகிறார்கள். தற்போது வடபகுதியில் நடைபெறும் சம்பவங்கள் இவற்றை எடுத்துக் காட்டுகின்றன.

இதற்குப் பதிலடி எப்படி அமையும் என்பதை அவர்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஒளித்து இருந்து தாக்குவதை விடுத்து நேருக்கு நேர் தாக்க தீவிரவாதிகள் முன்வரவேண்டும்- இப்படி அவர் சொன்னார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்,207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 25-04-1986
Registered as a Newspaper at the Genaral Post Office Sri Lanka Under Number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org